Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 301 | செவ்வாய்க்கிழமை | புரட்டாதி 12 ஆம் நாள் 28 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்:16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## 112 நாள்களின் பின் 1000க்கு குறைவான தொற்றாளர்கள்

*51 உயிரிழப்புகள்*

கொழும்பு, செப். 28

இலங்கையில் 112 நாள்களின் பின்னர் நாளொன்றில் ஆயிரத்துக்கும் குறைவான கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று 15 ➤

## வவுனியாவில் இருவர் சாவு 20 பேருக்குக் கொரோனா

வவுனியா, செப். 28

வவுனியாவில் 20 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இருவர் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க் 15 ➤

## இளம் தாய் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், செப். 28

இளம் குடும்பப்பெண் ஒருவர், தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பா 15 ➤

## சர்வதேச மத்தியஸ்தம் மூலம் இலங்கையுடன் பேசத் தயார்!

*புலம்பெயர் 8 அமைப்புகள் அறிவிப்பு*

கொழும்பு, செப். 28

பிரிட்டன், அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளில் ஒன்று அல்லது இணைந்த சர்வதேச மத்தியஸ்தம் மூலம் இலங்கை அரசுடன் பேச முடியும் என்று புலம்பெயர் நாடுகளைத் தளமாகக் கொண்டு இயங்குகின்ற பிரதானமான எட்டு தமிழ் அமைப்புகள் தீர்மானம் எடுத்து, அறிவித்துள்ளன. 13 ➤

## கொரோனாவால் யாழில் ஒருவர் சாவு

*மரண நிகழ்வில் அவர் பங்கேற்றவர்*

கொடிகாமம், செப். 28

கொடிகாமம் மீசாலை வடக்கு பகுதியில் தனிமைப்படுத்தலில் இருந்த 78 வயது முதியவர் ஒருவர் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தார் என்று சுகாதாரத் தரப்புத் தெரிவித்தது.

அவர் சுகவீனம் காரணமாக சிகிச்சைபெற தனியார் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கு மேற்கொள்ளப்பட்ட அண்டிஜென் சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து அவருடைய வீட்டிலேயே 15 ➤

# சர்வதேசப் பொறிமுறைக்கு இலங்கையில் இடமேயில்லை!



## ஐ.நா. உள்ளிட்ட பல அமைப்புகளிடமும் தெளிவாகக் கூறிவிட்டோம் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, செப்ரெம்பர் 28

"இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்க்க சர்வதேச பொறிமுறையை ஒருபோதும் ஏற்கமாட்டோம். அதேபோல இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நகர்வுகளையும் அனுமதிக்க மாட்டோம். இந்த விடயத்தை அனைத்துலக சமூகத்திடமும், ஐ.நா. மற்றும் அதன் கிளை அமைப்புகளிடமும் தெளிவாக எடுத்துரைத்துவிட்டோம்." இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். 15 ➤

## அங்கஜனின் செயற்பாட்டால் அதிகாரிகளிடையே குழப்பம்

யாழ்ப்பாணம், செப். 28

வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் தயாரிப்புக்கு அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக யாழ்ப் 15 ➤

## வாள்வெட்டுக்குழு அல்வாயில் அட்டூழியம்! ஒருவர் கைது: ஏனையோர் தலைமறைவு

*2 வீடுகள் தீக்கிரை, 6 குடும்பங்கள் இடம்பெயர்வு!*



யாழ்ப்பாணம், செப். 28

வடமராட்சியில், வாள்வெட்டுக் குழுவின் அட்டூழியங்களால் இரண்டு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. மேலும் சில வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் வாள்வெட்டுக் 15 ➤

## வாளுடன் 'டிக்டொக்'; இளைஞன் கைது

*சங்கானையில் சம்பவம்*



யாழ்ப்பாணம், செப். 28

வாளுடன் 'டிக்டொக்' காணொலி பதிவுசெய்து வெளியிட்ட 19 வயது இளைஞன் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 15 ➤

தாளையடி, நயினாதீவில்

## குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பிக்கிறார் பிரதமர்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் மூன்று லட்சம் மக்களுக்கு (60 ஆயிரம் குடும்பங் [illegible] 15 ➤

## கட்டுப்பாட்டு விலை அரிசிக்கு நீக்கம்!

ஒரு லட்சம் மெ.தொன் இறக்குமதிக்கும் அனுமதி

கொழும்பு, செப். 28

அரிசிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு அமைச்சரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது. 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர்களின் காணிகளும் அபகரிப்பு

# ராஜபக்சக்களின் காட்டாட்சிக்கு மிகவிரைவில் முடிவு கட்டுவோம்

## எதிர்க்கட்சித்தலைவர் சஜித் சூளுரை

கொழும்பு, செப். 28

**"கோத்தாபய- மஹிந்த தலைமையிலான ராஜபக்ச அரசின் காட்டாட்சிக்கு விரைவில் முடிவு கட்டுவோம்." என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாணமவில் உள்ள ராகம்வேல கிராமத்தில் நில அபகரிப்பு குறித்து கேள்விப்பட்டவுடன் அது தொடர்பாக ஆராய்வதற்காக, பாணமவிலுள்ள ஸ்ரீ போதிருக்காராமயவுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் அரசால் ஒரு புதிய வகை நில அபகரிப்பு நடைபெற்று வருகின்றது. பாணம பிரதேசம் அதற்குப் பலியாகிவிட்டது. உள்நாட்டு வளங்களைத் துச்சமாக மதித்து வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் அரசு, மறுபுறம் அப்பாவிப் பொதுமக்களின் நிலங்களைச் சூறையாடுவதையும் ஊக்குவிக்கின்றது.

அரசியல் அதிகாரம் இருப்பதற்காக, பணத்துக்காக யாரும் இந்த நிலங்களை கொள்ளையடிக்க அனுமதிக்கக் கூடாது.

அரசு நாட்டை ஒரு மோசமான நிலைக்குத் தள்ளுகின்றது. காட்டுச் சட்டத்தின் கீழ் நடத்தப்படும் இந்தக் கொள்ளைக்கு எதிராக சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்" என்றார். (த-22)

பிணை நிபந்தனையை மீறி

# ஊருக்குச் சென்ற நபர் ஓட்டோவை கைவிட்டு ஓட்டம்

யாழ்ப்பாணம், செப். 28

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம் பகுதியில், இரட்டைக்கொலை வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேகநபர், பிணை நிபந்தனையை மீறி குற்றம் நிகழ்ந்த பகுதிக்குச் சென்றுள்ளார் என்றும், அங்கு கொல்லப்பட்டவர்களின் உறவினர்களைக் கண்டதும் ஓட்டோவைக் கைவிட்டுத் தப்பியோடிவிட்டார் என்றும் குற்றம்சாட்டப்படுகின்றது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் சுழிபுரம் மத்தி பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவத்தில், தொடர்புடைய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் இருந்த இருவருக்கு அண்மையில் நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டது. குறித்த நிபந்தனைகளில் ஒன்று, குற்றம் நிகழ்ந்த பகுதிக்குச் செல்லக்கூடாது என்பது. எனினும், அந்த நிபந்தனையையும் மீறி குறித்த பகுதிக்குச் சந்தேகநபர்களில் ஒருவர் நேற்று வந்துள்ளார் என்றும் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களைக் கண்டதும் தப்பியோடியுள்ளார் என்றும் அங்குள்ளவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபர் கைவிட்டுச் சென்ற ஓட்டோவை மீட்டனர். அது தொடர்பில் விசாரணை நடக்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-125)

# திருட்டுக் குற்றச்சாட்டில் அரியாலை நபர் கைது

சில பொருள்களும் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்.கொழும்புத்துறை இலந்தைக்குளம் பகுதியில், வீடு புகுந்து திருடிய குற்றச்சாட்டில் அரியாலையைச் சேர்ந்த 24 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். திருடப்பட்ட சில பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியிலுள்ள ஓய்வுபெற்ற மருத்துவர் ஒருவரின் வீட்டிலேயே கடந்த 8ஆம் திகதி திருட்டு இடம்பெற்றிருந்தது.

இந்தநிலையில் சந்தேகநபர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 'ஐ பாட்' மற்றும் இரு ஐ அலைபேசிகள், ஒலிக் கருவிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-20)

# குடும்பப் பிரச்சினையால் மனைவி சுட்டுக் கொலை



கொழும்பு, செப். 28

இரத்தினபுரி மாவட்டம், எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரதமண்டிய பிரதேசத்தில் நபர் ஒருவர் தனது மனைவியைத் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

குடும்பச் சண்டையே இந்தக் கொலைச் சம்பவத்துக்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்குள்ளான பெண் எம்பிலிப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும், அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம், உடல் கூற்றுப் பரிசோதனைக்காக எம்பிலிப்பிட்டிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொலைக்குப் பயன்படுத்திய துப்பாக்கியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-22)

# கர்ப்பிணிப் பசுவை வெட்டி வீசிய விசமிகள்

குளத்தில் மிதந்தநிலையில் கண்டறிவு



வவுனியா, செப். 28

வவுனியா தவசிகுளம் பகுதியில் கன்று ஈனும் நிலையிலிருந்த பசு ஒன்றைக் கத்தியால் வெட்டி குளத்தில் எறிந்துள்ளனர் விசமிகள்.

இதே பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரின் நல்லின வளர்ப்புப் பசு கடந்த இரு தினங்களாகக் காணாமற்போயுள்ளது.

அதைத் தேடியபோதே அவரது வீட்டுக்கு அருகிலுள்ள குளத்தில் உயிரிழந்த நிலையில் அப்பசு காணப்பட்டது.

குறித்த பசுவின் தலை மற்றும் உடல் பகுதிகள் கூரிய ஆயுதத்தால் அறுக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-110)

# குழந்தைகள் பிறக்கின்றபோதே அ.அட்டை வழங்கப்படவேண்டும்

வலியுறுத்துகின்றது மருத்துவர் சங்கம்

கொழும்பு, செப். 28

இலங்கையில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க ஒவ்வொரு குழந்தைக்கும் பிறக்கும்போதே அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.


இவ்வாறு சங்கத்தின் ஊடகக்குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்களுக்கான கொரோனாத்தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வயது வந்தவர்களுக்கு தடுப்பூசி வழங்கும்போது அவர்களுடைய அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை பயன்படுகிறது. ஆயினும், இலங்கையைப் பொறுத்தமட்டில் சிறுவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் செயற்பாடு நடைமுறையில் இல்லை.

இதனைக் கருத்திற்கொண்டு புதிதாக பிறக்கின்ற குழந்தைகளுக்கு, அவர்களுக்கான பிறப்புச் சான்றிதழை வழங்கும்போது, அடையாள அட்டை இலக்கம் மற்றும் அடையாள அட்டையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது. - என்றார். (த-இ)

# காணி துப்புரவாக்க வெளிவந்த குண்டு



யாழ்ப்பாணம், செப். 28

வல்வெட்டித்துறைப் பகுதியில் காணியைத் துப்புரவு செய்த போது குண்டு ஒன்று நேற்றுக் கண்டறியப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுகதனவி மின் திட்டத்தால் மின் கட்டணம் குறையுமாம்

## பங்காளிகளும் பச்சைக்கொடி என்கிறார் பெரமுனவின் செயலாளர்



கொழும்பு, செப். 28

**கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளே அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்படுகின்றன. அதை விற்பனை நடவடிக்கையாக கருத முடியாது**

என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகள் வெளிநாட்டு முதலீட்டுக்காக, வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு வழங்கப்படுகின்றது. 15 வருடங்களுக்கு பிறகு குறித்த மின் திட்டத்தின் முழுமையான உரிமம் இலங்கை மின்சாரசபை வசமாகும். இது எந்தவிதத்திலும் விற்பனை நடவடிக்கையாக அமையாது.

நாட்டின் நலனுக்காக அல்ல, குறுகிய அரசியல் நோக்கத்துக்காகவே சிலர் இதனை எதிர்க்கின்றனர்.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக ஆரம்பமானால் மின்சாரக் கட்டணத்தை மேலும் குறைக்கக்கூடியதாக இருக்கும். நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டமே இது.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தினால் அதன் நன்மை மக்களையே சென்றடையும். மின்கட்டணத்தை 30 வீதம்வரை குறைக்க முடியும்.

இந்த மின்திட்டம் தொடர்பில் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கு சில கேள்விகள் இருந்தன.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவர்கள் கேள்விகளை எழுப்பினர். நிதி அமைச்சர் உரிய விளக்கத்தை வழங்கினார். அதன்பின்னர் அவர்கள் எதிர்ப்பை வெளியிடவில்லை. -என்றார். (எ-44)

# 5 நாடுகளுக்கான தடை மலேசியாவால் நீக்கம்

கொழும்பு, செப். 28

இலங்கை உட்பட 5 நாடுகளின் பயணிகளுக்கு விதிக்கப்பட்ட தடையை மலேசியா கடும் நிபந்தனைகளுடன் தளர்த்தியுள்ளது.

அதற்கமைவாக நிரந்தர வதிவிட அஸ்தஸ்து, நீண்ட கால பாஸ், வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் ஆகியோர் குறித்த 5 நாடுகளிலிருந்து மலேசியாவுக்குள் நுழையலாம்.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன என்று மலேசியாவின் குடிவரவு இயக்குநர் நாயகம் கைருல் டைமி தாவுத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வருகை தருவோர் முழுமையாக தடுப்பூசி செலுத்தியிருத்தல் வேண்டும்.

நாட்டுக்கு வந்ததும் கொரோனாப் பரிசோதனைக்குள்ளாக வேண்டும். சகல வெளிநாட்டவர்களும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று குறித்த 5 நாடுகளின் தூதரகங்களுக்கு அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை அனைத்து நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான தடை மலேசியாவில் இன்னும் நடைமுறையில் உள்ளது.

மலேசியாவில் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க கடந்த ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. (ம-4)

# ஜனாதிபதி செயலகத்துக்கு தாவியது கொரோனா

ஜனாதிபதி செயலகத்தின் கணினி தொழில்நுட்பப் பிரிவின் தலைவர் துலன் விஜேரத்ன கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளார்.

தொற்றுக்குள்ளான இவர் கொத்தலாவல பாதுகாப்பு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். இவர் இலங்கைக் கடற்படையின் அதிகாரியாவார். கண்டி தர்மராஜா கல்லூரியின் பழைய மாணவரும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## ஆசிரியர்கள் ஊதிய விவகாரம்

# ரூ.5 ஆயிரம் கொடுப்பனவுக்கு 15 பொறுப்புக்கள் ஒப்படைப்பு



கொழும்பு, செப். 28

ஆசிரியர்கள் 5 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், நிறைவேற்ற வேண்டிய 15 பொறுப்புகள் அடங்கிய புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஒன்லைனில் அல்லது பிற முறைகளைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு கற்பித்தல், க.பொ.த உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்தல், பாடசாலையில் நடைமுறையிலுள்ள விசேட திட்டங்களுக்கு பங்களிப்பு, கடமைத் தேவைகள் குறித்த கூட்டங்களில் கலந்து கொள்வது, புதிய தேசிய பாடசாலை தொடர்பான செயற்பாடுகள், தடுப்பூசி செயற்றிட்டம் மற்றும் பாடப்புத்தக விநியோகம் ஆகியவை உள்ளிட்ட 15 பொறுப்புகள் சுற்றறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

அதிபர்கள், ஆசிரியர்களின் கடமைகளில் திருப்தி அடைந்தால், சம்பந்தப்பட்ட ஊக்குவிப்புத் தொகையை வழங்குவதற்கு, வலயக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊக்குவிப்புத் தொகையைப் பெறத் தகுதியுள்ள அதிபர், ஆசிரியர்களுக்கு அதனை வழங்கும் அதிகாரம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ம-4)

# க.பொ.த. சா/த பரீட்சையில் 2,36,053 மாணவர்கள் சித்தி

கொழும்பு, செப். 28

2020 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையில் 2 லட்சத்து 36 ஆயிரத்து 53 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டுக்கான பரீட்சை முடிவுகள் பாராட்டுக்குரியன.

தேர்வில் தோற்றி பெற்ற குழுவில் 2 லட்சத்து 31 ஆயிரத்து 458 பாடசாலை விண்ணப்பதாரர்கள் உள்ளனர்.

அழகியல் பாடங்களின் முடிவுகளும் வெளியிடப்படும் போது, இந்த எண்ணிக்கையில் மேலும் மாற்றத்தைக் காணமுடியும்.

சாதாரண தரப் பரீட்சை என்பது ஒரு போட்டி அல்ல.

மாணவர்களின் முயற்சிகள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் அவர்கள் வெற்றி பெற்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# வளங்களைச் சூறையாட இனியும் இடமளியோம்

## குணவன்ச தேரர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 28

நாட்டில் தேசிய வளங்களை சூறையாடுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய வளங்களை நேசிக்கும் தலைவர்கள் இருக்க வேண்டும். ஆனால் இன்று அத்தகைய தலைவர்கள் இல்லை என்பது துயரமானது. பண்டாரநாயக்கவுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அனைத்து தலைவர்களும் நாட்டின் வளத்தின் ஒரு பகுதியை இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு விற்றனர்.

எம்.சி.சி ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவோம் என்று உறுதியளித்த தற்போதைய அரசு இப்போது உடன்படிக்கையை பகுதிகளாகச் செயற்படுத்துகின்றது. யுகதனவி மின் நிலையம் அதே ஒப்பந்தத்தின் ஒரு பகுதி.

இது தொடர்பாக சட்டத்துறையுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அரசின் முயற்சிகள் எப்படியாயினும் தோற்கடிக்கப்பட வேண்டும். -என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரநாயக்கவின் கொள்கையை விற்றுப்பிழைக்கிறது மைத்திரி அணி

## சந்திரிகா சாட்டையடி



**கொழும்பு, செப். 28**

**சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகத் தலைவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் கொள்கைகளை, தற்போதைய சுதந்திரக்கட்சி விற்றுப் பிழைத்துக் கொண்டிருக்கின்றது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றஞ்சாட்டினார்.**

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் 62ஆவது நினைவு தின நிகழ்வு, ஹொரகொல்லவிலுள்ள பண்டாரநாயக்கவின் நினை விடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டாரநாயக்கவுக்கான நினைவு தின நிகழ்வை கட்சி ஏற்பாடு செய்வதில்லை. அதனை பண்டாரநாயக்க குடும்பமே செய்து வருகின்றது. நிகழ்வை நடத்துவதை விடுத்து பண்டாரநாயக்கவின் பெயரை விற்றுப் பிழைத்துக் கொண்டிருக்கின்றது தற்போதைய சுதந்திரக்கட்சி. மைத்திரிபால சிறிசேன 5 ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்தார். ஒரு வருடம் மட்டுமே இங்கு வந்தார். தற்போது ஏனைய இடங்களில் இருந்து அவர் விரட்டப்பட்டுள்ளதால் இன்று நிச்சயம் வருவார் - என்றார். (ம-4,44)

# நாட்டின் எதிர்காலம் சுதந்திரக்கட்சி வசம்

## மைத்திரி நம்பிக்கை



கொழும்பு, செப். 28

நாட்டின் எதிர்காலம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கையில் உள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

முன்னாள் பிரதமரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகருமான எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கவின் 62ஆவது நினைவுதினம் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்டு, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக எம்முடன் இணையுமாறு, பண்டாரநாயக்கவின் சமாதியிலிருந்து சகல மக்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம். இன்று நாடும் மாறிவிட்டது. உலகமும் மாறிவிட்டது. பண்டாநாயக்கவின் முற்போக்கான கொள்கை வேலைத்திட்டம் என்பன இன்றைய யுகத்துக்கு ஏற்றதைப் போல அன்றே உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, புதிய பொருளாதாரக் கொள்கைகள், மக்களின் எதிர்கால நலன்களுக்கான வேலைத்திட்டம், ஊடக சுதந்திரம், மனித உரிமைகள், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி, அனைத்தையும் விரைவாக கொள்கை ரீதியாக செயற்படுத்த முன்னோக்கிச் செல்ல எதிர்பார்க்கிறோம் - என்றார். (ம-4)

# தனியார் சொத்துக்களை பதிவுசெய்ய வலியுறுத்து

கொழும்பு, செப். 28

கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், பதிவுசெய்யப்படாத தனியார் சொத்துக்களைப் பதிவுசெய்யுமாறு சொத்துரிமையாளர்களிடம், கொழும்பு நகராட்சி ஆணையாளர் சட்டத்தரணி திருமதி ரோஸனி திஸாநாயக்க கேட்டுள்ளார்.

சொத்துக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சொத்துக்களை நகர சபையில் பதிவு செய்திருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, கொழும்பு நகராட்சிப் பிரிவுக்குட்பட்ட இதுவரை பதிவு செய்யப்படாத சொத்துக்களை கொழும்பு மாநகர சபையின் www.colombo.mc.gov.lk எனும் உத்தியோகப்பூர்வ இணையத் தளத்தின் மூலம் பதிவு செய்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# ஊடகவியலாளரின் வீட்டின் மீது தாக்குதல் தமிழ் ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்!

வவுனியா, செப். 28

ஊடகவியலாளரை அச்சுறுத்தி நீதியை நசுக்கும் செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம் என்று வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மன்னார் பண்டிவிரிச்சானை சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளரின் வீடு இனம் தெரியாத நபர்களால் நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டிருந்ததுடன், அருட்தந்தை ஒரு வர் தொலைபேசியூடாக அவருக்கு அச்சுறுத்தலும் விடுத்திருந்தார்.

குறித்த விடயங்கள் தொடர்பாக வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

மன்னார் கோவில்மோட்டை பகுதியில் விவசாயிகளின் காணியில் ஏற்பட்ட குழப்பநிலை தொடர்பான செய்தியைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரின் வீடு இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதுடன், அருட்தந்தை ஒருவர் தொலைபேசி வாயிலாக குறித்த ஊடகவியலாளரை அச்சுறுத்தியும் இருந்தார்.

இது ஊடகவியலாளர்களின் சுதந்திரமான ஈடுபாட்டுக்கு இடைஞ்சலை ஏற்படுத்துவதுடன் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை நசுக்கும் ஒரு செயற்பாடாகவே எமது சங்கம் பார்க்கின்றது. அமைதியையும், சமத்துவத்தையும் நிலைநாட்டவேண்டிய மதகுரு ஒருவரே வன்முறையை தூண்டும் விதமாக தொலைபேசி வாயிலாக அச்சுறுத்தல் விடுப்பது ஏற்றுக்கொள்ளமுடியாத செயலாகவே நோக்கமுடியும்.

தவறுகளை சுட்டிக்காட்டி உண்மைகளை வெளிக்கொண்டுவரும், ஊடகவியலாளர்கள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் விடுக்கப்படும் இவ்வாறான அச்சுறுத்தல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

எனவே ஊடகவியலாளரை தொலைபேசியில் அச்சுறுத்திய அருட்தந்தை மற்றும் அவரது வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கான தண்டனையை பெற்றுக்கொடுப்பதற்கு பொலிஸார் விரைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம் என்றுள்ளது. (ஜ-110)

# சுகாதார அமைச்சுக்காக பெரும்தொகை ஒதுக்கீடு



கொழும்பு, செப். 28

2022ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கு பெரும் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு மற்றும் கல்வி அமைச்சுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டாலும், 2022ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார அமைச்சுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். அடுத்தாண்டு சுகாதார அமைச்சின் கீழ் புதிய கட்டடங்கள் நிர்மாணிப்பதைத் தவிர்ப்பதற்கும் தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்களை நிறைவு செய்வதற்கும் கொள்கையளவில் முடிவு எட்டப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தற்போதைய திட்டங்களை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம்-என்றார். (ம-4)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



உருத்திபுரம் சிவநகர் பாடசாலை மாணவன்

செல்வன் சதீஸ்நாபன் ஆதித்தன்

சாதாரண க.பொ.த.பரீட்சையில் 5A, 2B, 2C சித்திபெற்றுள்ளார். அவரை மேன்மேலும் சித்திபெற்று கல்வியில் சிறந்து விளங்க மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.திருமதி கந்தசாமி காந்திமதி
பேரன்-பேர்த்தி
3ம் வட்டாரம், நயினாதீவு.


# உரப்போர்வையில் சீனக்குப்பைகள்



## இறக்குமதியை நிறுத்துமாறு வலியுறுத்து

கொழும்பு, செப். 28

இயற்கை உரம் என்று கூறி இறக்குமதி செய்யப்படவுள்ள 'சீனப் குப்பைகளின் இறக்குமதியை உடன் நிறுத்தவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனாவிலிருந்து 63 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் உரம் இறக்குமதி செய்யப்படுகின்றது. சீனாவின் மாநகராட்சிக் கழிவுகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் நச்சு பக்டீரியாக்கள் அடங்கிய உரத்தை அங்குள்ள கிங்டாவோ என்ற நிறுவனம் மூலம் இறக்குமதி செய்யவுள்ளது.

இந்த உரம் நமது பயிர்களுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும். அத்துடன் நமது நாட்டுக்கும் தீங்கு விளைவிக்கும் பல நுண்ணுயிர்களைக் கொண்டிருக்கின்றது. நாட்டின் வல்லுநர்கள் சீனக் குப்பைகளை இறக்குமதி செய்யக்கூடாது என்று வலியுறுத்திய போதும், அரசு அதனை எந்த அடிப்படையில் செய்கின்றது - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதிய உத்தியோகத்தர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், செப். 28

**நாடளாவிய ரீதியில் தாதியர் சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு வரும் நிலையில் அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளின் தாதிய உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர்.**





கொரோனா காலத்தில் தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல், இந்தக் காலத்தில் மேலதிக நேர விசேட கொடுப்பனவினை கட்டுப்பாடு இன்றி வழங்குதல் மற்றும் சுகாதார ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட கோரிக்கைகைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை தாதியர்கள் மற்றும் முல்லைத்தீவு பிரதேச மருத்துவமனை சிற்றூழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை 6 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். மாவட்ட மருத்துவமனை உள்ளிட்ட மருத்துவமனைகளுக்கு சென்ற நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் நீண்ட தூரங்களில் இருந்து மாவட்ட மருத்துவமனைக்கு சென்றபோதும் அவர்கள் சிகிச்சை பெற்றுக்கொள்ளமுடியாத நிலை காணப்படுவதாக கவலை தெரிவித்தனர்.

**வவுனியா**

வவுனியா மாவட்ட மருத்துவமனையின் தாதிய உத்தியோகத்தர்கள் காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அவசர நோயாளர்களுக்கான உயிர் காப்பு சிகிச்சைகள் அனைத்தும் வழமைபோல இடம்பெற்றன. இதேவேளை எமது கோரிக்கைகளுக்கு அரசு உடனடியாக செவிசாய்க்காதுவிடின் தொடர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையை முன்னெடுப்போம் என்று தாதிய உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

**மன்னார்**

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் தாதியர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். காலை 7.30 மணி முதல் மதியம் ஒரு மணிவரை குறித்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால், நேற்றுக் காலை மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனைக்கு வருகைதந்த நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை பணியாளர்கள் நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-9-56-110)

---

யாழில் இருந்து கொழும்புக்கு

## கஞ்சா கடத்திச்சென்ற மூவருக்கும் மறியல்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி கஞ்சா கடத்திச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை மாங்குளம் பகுதியில் வைத்து இவர்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டனர். புத்தளத்தினைச் சேர்ந்த 34 வயதுடைய பொலிஸ் அலுவலர் ஒருவரும், நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபரும் யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இதையடுத்து அவர்களை எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-19)

---

## 2 கிலோகிராம் கஞ்சா இயக்கச்சியில் மீட்பு!

சந்தேகநபர்கள் ஓட்டம்

கிளிநொச்சி, செப். 28

இயக்கச்சி பகுதியில் மோட்டார் சைக்கிளில் வைத்துக் கடத்தப்பட்ட இரண்டு கிலோகிராம் கஞ்சா நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.

அவற்றைக் கடத்திய சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இயக்கச்சி பகுதியில் கஞ்சா கடத்தப்படுகின்றது என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் தப்பிச்சென்றுள்ள நிலையில் அவர்களைக் கைதுசெய்ய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-6)

---

## ஒன்பது வழக்குகளுடன் தொடர்புள்ள சந்தேகநபர் இளவாலையில் கைது!




இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிப்புலம் பன்னமூலை பகுதியில் ஒன்பது வழக்குகளுடன் தொடர்புடைய சந்தேக நபர் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது: இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னமூலை பகுதியைச் சேர்ந்த ஒன்பது வழக்குகளுடன் தொடர்புபட்ட 24 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் தேடி வந்த நிலையில் குறித்த சந்தேக நபர் தலைமறைவாகியிருந்தார். இந்த நிலையில் இளவாலை பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த இடம் முற்றுகையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர். மேலும் கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 2 கிராம், 15 மில்லிகிராம் அளவுடைய ஹெரோய்ன் மீட்கப்பட்டது. அவரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணையில் திருட்டு உடைமைகளை தம்வசம் வைத்திருந்த மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டனர். (ம-125)

---

## பாலம் அமைப்பதற்கு தோண்டப்பட்ட குழிகளால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதநிலை

பொதுமக்கள் கவலை



கொடிகாமம், செப். 28

புலோப்பளை மற்றும் அல்லிப்பளைக்கு செல்லும் வீதியில் பாலம் அமைப்பதற்காக தோண்டப்பட்ட குழிகளால் போக்குவரத்தை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு சொந்தமான புலோப்பளை மற்றும் அல்லிப்பளைக்கு செல்லும் வீதி ஐறோட் திட்டத்தில் சீரமைக்கப்படவுள்ளது. இதன் காரணமாக ஏ9 வீதியில் இருந்து 50 மீற்றர், 600 மீற்றர் மற்றும் 900 மீற்றர் தூரத்தில் பாலம் அமைப்பதற்காக மூன்று இடங்களில் கிடங்குகள் தோண்டப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வீதிக்கு குறுக்காக கிடங்குகள் தோண்டப்பட்டுள்ள இடத்தில் வீதியின் இரு மருங்கிலும் வயல்கள் இருப்பதால் வயல்வெளியினூடாக வாகனங்களிலோ நடந்தோ செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்கு சொந்தமான வைரவர் கோயில் வீதி மாற்றுப்பாதையாக காணப்படுகின்ற போதும் கடந்த வருடம் வெள்ளம் பாய்வதற்காக குறித்த பாதைக்கு நடுவே நீளமாக வாய்க்கால் வெட்டியதால் அந்த பாதையையும் பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் புலோப்பளை மேற்கு, புலோப்பளை கிழக்கு, அல்லிப்பளை, அறத்திநகர் மற்றும் செல்வபுரம் ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கவும் -என்றனர். (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.நாவில் அறிவிக்கப்பட்ட

# கோத்தாபயவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்!

## மலையக மக்கள் முன்னணி வலியுறுத்து

**கொழும்பு, செப். 28**

**ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால், நல்லிணக்கம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதற்கான அழுத்தத்தை அனைத்து தமிழ்க் கட்சிகளும் இணைந்து பிரயோகிக்க வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைது செய்வதாக இருந்தால் அதற்கு சபாநாயகரின் அனுமதி அவசியம். ஆனால் தற்போது அவ்வாறு நடப்பதில்லை. அந்த வகையிலேயே செல்வராஜா கஜேந்திரன் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் செய்தது சரியா, தவறா என்பதை விட, அவர் கைது செய்யப்பட்ட விதம் தவறாகும்.

தற்போதைய சபாநாயகர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையைப் பாதுகாப்பதற்காக தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துவதில்லை.

அவர் நிச்சயம் பயன்படுத்த வேண்டும். இன ஒற்றுமை, நல்லிணக்கம் குறித்தெல்லாம் ஐ.நா.வில் ஜனாதிபதி உரையாற்றினார். ஆனால் இங்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்படுகின்றார். வெளிநாட்டில் ஒன்றைக் கூறிவிட்டு உள்நாட்டில் வேறொன்றைச் செயற்படுத்த அனுமதிக்கக்கூடாது. எனவே, ஐ.நாவில் தான் குறிப்பிட்ட விடயங்களுக்கு ஜனாதிபதி செயல் வடிவம் கொடுக்க வேண்டும். அதற்கான அழுத்தத்தை தமிழ்க் கட்சிகள் இணைந்து கொடுக்க வேண்டும்.- என்றார். (ம-4,44)



# வட்ஸ்அப் குழு போலியானது

கொழும்பு, செப். 28

இலங்கையில் இருந்து இயக்கப்படும் ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதக் குழுவுடன் தொடர்புடைய வட்ஸ் அப் குழு போலியானது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

'இன்டர் ஸ்கூல்' என்ற அந்த வட்ஸ்அப் குழு ஐ.எஸ்.ஐ.எஸ் உடன் தொடர்புடையது. யாராவது இணைந்த பின்னர், அவர்கள் குழுவிலிருந்து வெளியேற முடியாது. மேற்கு மாகாண புலனாய்வுப் பிரிவினால் கடிதம் வெளியிடப்பட்டது. அந்தக் கடிதம் ஐ.எஸ்.ஐ.எஸ் அனுப்பியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் சர்வதேச புலனாய்வு அமைப்புடன் இணைந்து நடத்திய விசாரணையில் இந்தக் குழு போலியானது என்று தெரியவந்துள்ளது. இந்தக் கடிதம் உண்மையான நகல். ஆனால், அதில் குறிப்பிடப்பட்டுள்ள வட்ஸ் அப் குழு தற்போது செயலற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# அஹ்மத் – பீரிஸ் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,செப்.28

வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் தெற்காசியா, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான ஐக்கிய இராச்சியத்தின் இராஜாங்க அமைச்சர் அஹ்மத் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நியுயோர்க்கில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் அண்மையில் இடம்பெற்றது.


வர்த்தகம், துறைமுக நகரம், முதலீட்டு வாய்ப்புகள், சுற்றுலாவை மீண்டும் ஆரம்பித்தல், புலம்பெயர் மக்களுடனான உறவுகள், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர்.

இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பீரிஸ் விடுத்த அழைப்பை, அஹ்மத் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார் என்று வெளிநாட்டு அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-4)

# 360 மெ.தொன் பால்மா துறைமுகத்தில் தேக்கம்

கொழும்பு, செப். 28

இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 360 மெற்றிக் தொன் பால்மா அடங்கிய 16 கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் தேக்கமடைந்துள்ளன என்று பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் லக்ஸ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார். சுமார் 30 மில்லியன் ரூபா பெறுமதியான பால்மாவின் கையிருப்பு காலாவதியாக வாய்ப்புள்ளது. வர்த்தக வங்கிகளின் டொலர் பற்றாக்குறை காரணமாக இவ்வாறு பால்மா தேக்கமடைந்துள்ளது. எனினும் பால்மா கையிருப்பை வெளியிடுவதற்கு தடையிட வேண்டும் என்று பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)





# 125 மில். பார்வையாளர்களை கடந்த 'மனிகே மகே ஹிதே'

கொழும்பு, செப். 28

ஒரேயொரு பாடல் மூலம் உலகம் முழுவதையும் தன் பக்கம் ஈர்த்த இலங்கைப் பாடகி யொஹானி டீ சில்வாவின் மனிகே மகே ஹிதே என்ற பாடல் நான்கு மாதங்களில் 125 மில்லியன் பார்வையாளர்களைக் கடந்துள்ளது.

கடந்த மே மாதம் 22ஆம் திகதி இந்தப் பாடல் யூடியுப் வலைத்தளத்தில் உத்தியோகபூர்வமாக பதிவேற்றப்பட்டது.

ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி 50 மில்லியன் பார்வையாளர்களையும், இந்த மாதம் 11ஆம் திகதியளவில் 100 மில்லியன் பார்வையாளர்களைக் கடந்து, தற்போது 125 மில்லியன் பார்வையாளர்களைக் கடந்துள்ளது. (ம-4)

# நாட்டு வளங்களை விற்று பிழைப்பு நடத்தும் அரசு

## ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 28

தேசிய பாதுகாப்பை உறுதி செய்வோம் என்றுகூறி ஆட்சிக்கு வந்த அரசு, நாட்டின் வளங்களை விற்று பிழைப்பு நடத்துகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசு நாட்டு மக்கள் மத்தியில் நகைச்சுவையாக மாறியுள்ளது. வெளிநாட்டவர்களுக்கும், சர்வதேச நிறுவனங்களுக்கும் நாட்டின் மின் சக்தியை விற்பனை செய்வதால், எதிர்காலத்தில் அவர்களால் மின்சாரத்தைத் துண்டிக்க முடியும். நாட்டின் மின்சக்தியை அமெரிக்காவுக்கு விற்பனை செய்து தேசத் துரோகிகளாகியுள்ளனர். இதில் பஸில் ராஜபக்சவே பிரதான சூத்திரதாரி. நிதி அமைச்சருடன் இணைந்து அமைச்சர்களான விமல், வாசு, கம்மன்பில ஆகியோர் நாட்டை காட்டிக் கொடுத்து விட்டனர்- என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இறங்குது கொரோனா, ஏறுது விலை!

ஒக்ரோபர் மாதம் நாடு முழுமையாகத் திறக்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. தொடர் முடக்கம் காரணமாக நெருக்கடிகளை எதிர்கொண்ட மக்களுக்கு இது ஆசுவாசத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பது உண்மை. ஆனால் நாடு திறக்கப்பட்ட பின்னர் இந்த ஆசுவாசம் தொடருமா என்பது கேள்விக்குறியே.

கொரோனாத் தொற்று நிலைமையில் இருந்து மக்கள் மீண்டாலும், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது இயலாத காரியம் என்றே தோன்றுகின்றது. நாடு திறக்கப்பட்ட பின்னர் இந்த நெருக்கடி தீவிரமாகும் என்றே பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுக்கின்றனர்.


பால்மா முதல் எரிவாயுவரை மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் அனைத்துப் பொருள்களின் விலைகளும் அதிகரித்திருக்கின்றன; இன்னும் அதிகரிக்கவுள்ளன. அரசு தொடர்ச்சியாக பணத் தாள்களை அச்சிட்டு வரும் நிலையில், இந்த விலையேற்றம் இப்போதைக்கு நின்றுவிடப் போவதில்லை. ஏற்கனவே வருவாயை இழந்துள்ள மக்கள் இந்த விலையேற்றத்தால் கடும் நெருக்கடியை எதிர்கொள்ளவுள்ளார்கள்.

இப்போது அரிசி ஆலைகளின் உரிமையாளர்களும், அரசுக்கு ஒருவாரம் காலக்கெடு விதித்திருக்கின்றனர். தங்களுக்கு உத்தரவாத விலை கொடுக்காவிட்டால் அடுத்தவாரம் முதல் அரிசி உற்பத்தியை நிறுத்துவோம் என்று எச்சரித்திருக்கிறார்கள். இந்த முரண்பாட்டுக்குத் தீர்வு எட்டப்படாவிட்டால் வெகு விரைவில் அரிசிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும். இனிமேல் அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதே நாட்டில் பெரும் சிக்கல்பாடாக இருக்கப் போகின்றது.

நாட்டில் எரிபொருள் கையிருப்பும் போதுமானதாக இல்லை என்றே தெரிகின்றது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் உள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாகவே கடந்த முறை தனிமைப்படுத்தல் ஊரடங்கை அரசு நீடித்தது என்று கூறியிருக்கின்றார். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு மாதத்துக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது என்று கூறினாலும், நாடு திறக்கப்பட்ட பின்னர் நுகரப்படும் எரிபொருளுக்கு, இந்தக் கையிருப்பு போதுமானதாக இருக்காது. ஆக, நாடு பெரும் இக்கட்டு நிலைமைக்குள் விரைவில் சிக்கப்போகின்றது என்பதே உண்மை.

ஆட்சியில் உள்ள அரசு "எடுத்தேன் கவிழ்த்தேன்" என்று எடுத்த சில முடிவுகளும் இந்த நிலைமைக்குக் காரணம் எனலாம். பொருளாதார வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட முடிவுகளாக அவை இருந்தாலும், உள்நாட்டில் திறன்வாய்ந்த மாற்று நடவடிக்கைகளை எடுக்க அரசு தவறியிருக்கின்றது. பிரச்சினைகள் பூதாகரமாகும் போது பதவியில் இருக்கும் ஆள்களை நீக்குவதும், புதியவர்களை அதிகாரத்துக்குக் கொண்டுவருவதும் என்று அரசு மக்களுக்குப் போக்குக் காட்டித் தப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றதே தவிர, காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறுகின்றது.

கடன்களை வாங்கியும், பணத் தாள்களை அச்சிட்டும் நிலைமையை பூசி மெழுகவே அரசு முற்படுகின்றது. தங்களது அரசியல் எதிர்காலத்தைத் தக்க வைக்கும் நோக்கிலேயே அதிகாரத்தில் உள்ளவர்கள் செயற்படுகின்றனர். தொடர்ந்தும் நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளும் செயற்பாடுகளையே ஆட்சியாளர்கள் முன்னெடுக்கின்றனர். ஆனால் இவற்றுக்கான விலையைச் செலுத்தப் போவது, அவர்களுக்கு வாக்களித்த அப்பாவி மக்களே.



# கொரோனா அடங்கியதும் மாகாணசபைத் தேர்தல்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தல்



**கொழும்பு, செப். 28**

**கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பில் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில்,

தேர்தல்களை நடத்தும் விதம்பற்றி தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. எமது கட்சியும் யோசனைகளை முன்வைத்துள்ளது. உள்ளூராட்சி மன்ற, மாகாணசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை ஒரு முறைமையின் கீழ் நடத்த வேண்டும் என்று அரசு கூறுகின்றது. ஆனால் விகிதாசார முறைமை பாதுகாக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் மூன்றாண்டுகள் பிற்போயுள்ளது. எனவே, மாகாணசபைத் தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டும். தற்போதைய நிலையில் நடத்த முடியாது. ஆனாலும் கொரோனா வைரஸ் பரவல் ஓரளவு கட்டுக்குள் வந்த பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி சபைகளின் ஆயுள்காலம் அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் தான் நிறைவு பெறுகின்றது. எனவே, மாகாண சபைகள் பற்றியே கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும். தேர்தல் என்பது ஜனநாயக உரிமை. அதனை அரசு பிற்போடக் கூடாது.

அதேவேளை, கொரோனா நெருக்கடியால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வாழ்வாதார வழிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிப்பதை ஏற்கமுடியாது. பொருள்களின் விலைகள் இப்படி அதிகரிக்கின்றதெனில் அரசொன்று எதற்கு?- என்றார்.

(ம-4,44)

# பாடசாலைகள் ஆரம்பித்ததும் டிசெம்பர் மாத விடுமுறை ரத்து

கொழும்பு, செப். 28

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் பாடசாலைகள் மீளத் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், வழமையாக வழங்கப்படும் டிசெம்பர் மாத விடுமுறை ரத்துச் செய்யப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.




கொரோனாத் தொற்றுக் காலத்தில் முடக்கப்பட்டுள்ள பாடசாலைகளை நான்கு கட்டங்களாக ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைவாக 200க்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் விரைவில் திறக்கப்படவுள்ளன. அதனால் வழமையான டிசெம்பர் மாதத்துக்குரிய விடுமுறையை ரத்துச் செய்வதற்கு கல்வி அமைச்சு ஆலோசித்துள்ளது என்று அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

(ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.தே.கூ, த.மு.கூ, மு.க ஆகியன

# விகிதாசார முறைமையில் ஒருமித்த நிலைப்பாட்டில்!

மனோ எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, செப். 28**
**விகிதாசார முறைமையை விட்டுக்கொடுக்க முடியாது என்பதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ளன என்று தெரிவித்தார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான மனோ கணேசன்.**

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, மனித உரிமை மீறல் சம்பவங்கள் ஆகியவை ஏற்படுத்தும் சந்தடிகளின் மத்தியில் தந்திரமாக தேர்தல் முறையை விகிதாசாரத்தில் இருந்து கலப்பு முறைக்கு ஒட்டுமொத்தமாக மாற்றி, குறிப்பாக தமிழ் பேசும் மக்களினதும், சிறு கட்சிகளினதும் இருப்புகளை இல்லாதொழித்து, இந்த நாட்டை இரண்டு பெரிய கட்சிகளுக்கு மட்டும் உரிய நாடாக மாற்ற முயற்சிகள் நடக்கின்றன.

இந்தப் பின்னணியில் இன்று, தேர்தல் சீர்திருத்த விவகாரத்தில், 'விகிதாசார முறைமையை விட்டுக்கொடுக்க முடியாது' என்ற பொது நிலைப்பாட்டில், தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய தமிழ், முஸ்லிம் கட்சிகளும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒருமித்த நிலைப்பாட்டில் இருக்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். ஏனைய தமிழ், முஸ்லிம் மற்றும் பெரும்பான்மை கட்சிகளுடனும் பேசி வருகிறோம்.

அதேவேளை ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை, முன்னுரிமை கொடுத்து, விகிதாசார முறையின் கீழ் நடத்த அரசாங்கம் உடனடியாக முன்வர வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் நாம் இருக்கின்றோம் - என்றார். (ம)

மொட்டு அரசின்

# பங்காளிகள் கோமாளிகள்

வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 28



ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, தம்மை தேசப்பற்றாளர்களாக அடையாளப்படுத்திக் கொண்டவர்கள், இன்று ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்வதற்காக, நாடகங்களை அரங்கேற்றும் கோமாளிகளாக வலம் வருகின்றனர் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டிலுள்ள ஒருபிடி மண்ணையேனும் வெளிநாட்டுக்கு தாரைவார்க்கமாட்டோம். விற்கப்பட்டுள்ள தேசிய வளங்கள் மீள பெறப்படும் என்று ராஜபக்சக்களும், அவர்களின் சகாக்களும் தேர்தல் காலங்களில் சூளுரைத்தனர். ஆனால் இன்று என்ன நடக்கின்றது? தேசிய வளங்கள் விற்கப்பட்டு வருகின்றன. மேலும் பல இடங்கள் விற்கப்படவுள்ளன. வெளிநாட்டு முதலீடு என்ற போர்வையிலேயே இதற்கான ஏற்பாடுகள் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் மக்களைத் திசை திருப்பி அரசை பாதுகாத்துக் கொள்வதற்காக பங்காளிக் கட்சிகள் வழமையான பாணியில் நாடகத்தை அரங்கேற்றத் தொடங்கியுள்ளனர்.

20ஆவது திருத்தச் சட்டம் வந்த போது, இரட்டைக் குடியுரிமைக்கு எதிராக போர்க்கொடி தூக்கினர். இறுதியில் சரணடைந்து சம்மதம் தெரிவித்தனர். கொழும்பு துறைமுக விவகாரத்திலும் இது நடந்தது. அடுத்ததாக கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்திலும் எதிர்ப்பை வெளியிட்டனர். ஆனால் மேற்கு முனையம் வழங்கப்பட்டுவிட்டது. தற்போது கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகள் அமெரிக்கா வசம் செல்லவுள்ளன. உடன்படிக்கை கைச்சாத்திடும் வரை 'கப்சிப்' என இருந்துவிட்டு, இன்று வீராப்புப் பேசுகின்றனர். தேசப்பற்றாளர்கள் போல் தம்மை காண்பித்துக்கொள்வதற்காக கோமாளிக் கூத்தாடுகின்றனர். இவர்களின் உண்மை முகம் அம்பலமாகியுள்ளது.

அதேவேளை, முஸ்லிம் மக்களுக்கு எதிராக பல வழிகளிலும் அடக்குமுறைகளைக் கையாண்டவர்கள் மீண்டும் தமது கைவரிசையைக்காட்ட ஆரம்பித்துள்ளனர். சிறிதுகாலம் ஓய்வில் இருந்த ஞானசார தேரர் மீண்டும் இனவாதத்தை கையிலெடுத்துள்ளார். முஸ்லிம் மக்கள் தமது உயிரிலும் மேலாக கருதும் அல்லாவையே அவர் விமர்சித்துள்ளார். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றார். (ம-4,44)

## இல்லங்களைக் கையளிக்க தயங்கும் 10 அமைச்சர்கள்

கொழும்பு, செப். 28

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோக பூர்வ இல்லங்களை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் 10 பேர் இதுவரை கையளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கெப்படிபொல மாவத்தையில் அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களைப் பெற்றுக்கொண்டுள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் பெயர் விவரங்களை வழங்க வேண்டும் என்று அரச சேவைகள், மாகாண, உள்ளூராட்சி மன்ற அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாதிவெலயில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை பெற்றுக்கொண்டிருந்த அமைச்சர்களான நாமல் ராஜபக்ச, ரோஹித அபேகுணவர்தன மற்றும் இராஜாங்க அமைச்சர்களான மொஹான் பிரியதர்ஷன டி சில்வா, டீ.பீ.ஹேரத் ஆகியோர்கள் இல்லங்களைக் கையளித்துள்ளனர்.

அதேவேளை அமைச்சர்களுக்கான உத்தியோக பூர்வ இல்லங்களை இதுவரையில் பெற்றுக்கொள்ளாத அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோக பூர்வ இல்லங்களைப் பயன்படுத்துவதில் பிரச்சினை இல்லை என்று நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-4)

## வர்த்தகரிடம் கப்பம் கோரல்

அறுவர் கைது

கொழும்பு, செப். 28

கொஸ்கம களுஅக்கலப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகரிடம் 2 கோடி ரூபா கப்பம் கோரினர் என்ற குற்றச்சாட்டில் பாதாள உலக குழுவினர் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஹங்வெல்ல, மற்றும் அதனைச் சூழ உள்ள பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

சந்தேகநபர்களிடம் இருந்து நான்கு வாள்கள், குண்டுகள், துப்பாக்கி, இரு வாகனங்கள் உள்ளிட்டவையும் கைப்பற்றப்பட்டுள்ளன. சட்டவிரோதச் செயற்பாடுகளை முன்னெடுத்த பிரபல பாதாள உலகக்குழுவின் நபர் டுபாய்க்குத் தப்பிச் சென்றுள்ளார். அவரது ஆலோசனைக்கு அமைவாக, சந்தேகநபர்கள் வர்த்தகரை அச்சுறுத்தி கப்பம் கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)

## நாட்டை மீட்பதற்கு ரணிலால் முடியும்!

ஐ.தே.க. நம்பிக்கை



கொழும்பு, செப். 28

பொருளாதார ரீதியாக வீழ்ந்து கிடக்கும் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு, முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் மட்டுமே முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

[illegible] தெரிவுசெய்யக் கூடாது. நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கும் சவால்களுக்கு முகங்கொடுத்து அவற்றை வெற்றிகொள்ளவும், வேலைத்திட்டங்களை முன்னெடுக்கக்கூடிய தலைவராகவும் ரணில் உள்ளார்.

ரணிலை விமர்சித்த, அவமதித்த, அவமானப்படுத்திய அனைவரும் தற்போது அழிந்துள்ளனர். நாட்டு [illegible]மைகளை நன்கறிந்துள்ள [illegible]கள் ஐ.தே.கவின் பின்னால் அணிதிரண்டுள்ளனர். நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி அடுத்த வருடம் ஏப்ரல் மாதமாகும்போது மோசமான நிலைக்குச் செல்லும்- என்றார். (ம-4)

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

கொழும்பு, செப். 28

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவ நிலையம் விடுத்துள்ள அறிக்கையின் அடிப்படையில், நுவரெலியா, காலி, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள்

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**இடபம்:** தாய்வழி உறவினர்கள் வருகையால் அதிகப்படியான செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படும்.

**துலாம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் பிரச்னைகளும் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால்நன்றாகதிட்டமிட்டுக்கொண்டு கவனமாக செல்லவும்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். இறை வழிபாட்டில் ஈடுபாடு ஏற்படும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

## சீனத் தொழிலதிபர் வான்சோ விடுதலை

அமெரிக்கா பின்வாங்கியது

பீஜிங், செப். 28

**வங்கி மோசடி விவகாரத்தில் கனடாவில் சிறைபிடிக்கப்பட்ட சீனாவின் பிரபல தொழிலதிபர்மெங்வான்சோ விடுதலை செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து அவர் நேற்றுமுன்தினம் சீனாவுக்குத் திரும்பினார்.**

சீனாவைச் சேர்ந்த உலகின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனமொன்றின் நிர்வாக அதிகாரியும் நிறுவனத்தலைவரின் மகளுமான மெங் வான்சோ வங்கி மோசடி விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்டு, 2018ஆம் ஆண்டு கனடாவில் சிறைப்பிடிக்கப்பட்டார். மேலும் ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை மீறினார் என்றும் அவர் மீது குற்றம்சாட்டப்பட்டது.

இந்தக் குற்றங்களுக்காக அவரை அமெரிக்காவிடம் ஒப்படைக்கும் வழக்கு தீவிரமாக நடந்து வந்தது. மெங் மீதான குற்றச்சாட்டுகளை அவருடைய நிறுவனமும் சீன அரசும் மறுத்து வந்தன. இது தொடர்பாக இடம்பெற்ற சட்டப்போராட்டங்களில் இருந்து அமெரிக்கா தற்போது பின்வாங்கியதை அடுத்து வான்சோ விடுவிக்கப்பட்டார். அவரைக் கண்காணித்துவந்த ஜி.பி.எஸ் கருவிகளும் அகற்றப்பட்டன. (ம)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 24 . 08 . 1985 — காலன்பறிப்பு 15 . 08 . 2021

### கருணேஸ் சாந்தி

(அபிவிருத்தி உத்தியோகத்தர்
கல்வித் திணைக்களம்,
வடமாகாண அமைச்சு)

என் உயிர் மனைவி சாந்தி
உங்களைக் காணாது என் மனம்
எல்லா இடமும் ஏங்கி அலைகிறது
அம்மா சாந்தி
நீங்கள் இல்லாத வேதனை
இப்போது தான் புரிகிறது
என் செல்லமே சாந்தி உங்களை
என்னுடன் சேர்ந்து வாழ
அந்த இறைவனுக்கே பிடிக்கவில்லையே !
சாந்தி
இன்னுமோர் பிறப்பு இருந்தால்
நீங்களே என் வாழ்க்கை துணைவியாக
வரவேண்டும் என்று ஏங்கித்
தவிக்கின்றேன் என் செல்லமே- சாந்தி
என்றும் உங்கள் நினைவில் வாழ்வேன்
சாந்தி - கணவனின் உள்ளக் குமுறல்-

இறைவன் விதி என்ற போட்ட கணக்கை
காலன் கண் இமைக்கும் நேரத்தில்
அரை நொடியில் முடித்துவிட்டன்
பதினொரு வருடமும் தவம் இருந்து பெற்ற
எங்கள் அருமை மகளை
கணப்பொழுதில் ஒருவன் இடித்து
என் பிள்ளையை கொன்றுவிட்டான்
இந்தப் பேரிடியை உங்கள் அம்மாவால்
தாங்க முடியவில்லை
துடிக்கிறேன் செல்லமே
எந்நேரமும் உங்கள் நினைவில்
வாழும் அம்மா

- அன்னையின் துரயம்-

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில்கொண்ட எங்கள் சாந்தியின் பிரிவுச் செய்தி கேட்டு, நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் சமூக வலைத்தளங்கள் ஆகியவை மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், சகல நிகழ்வுகளிலும் எம்முடன் கைகோர்த்து இன்றுவரை எமக்கு, சகல உதவிகளையும் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடக்கம்பரை, தொல்புரம்.

பிரிவுத்துயரில் வாழும்
கணவன், தாய் மற்றும் உறவினர்கள்.

கடத்தல்காரர்களைக் கொன்று

# பொதுஇடத்தில் சடலங்களை தொங்கவிட்டனர் தலிபான்கள்



காபூல், செப். 28

**கடத்தல் வழக்கில் கைதுசெய்யப்பட்டவர்களைக் கொலைசெய்து அவர்களின் சடலங்களை தலிபான்கள் பொது இடங்களில் தொங்கவிட்ட சம்பவம் அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ளது.**

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

ஆப்கானில் கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்ட நால்வரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற தலிபான்கள், இனியும் யாரும் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடக்கூடாது என்பதை அறிவிக்கும் வகையில் இறந்த நால்வரின் உடல்களை ஹெராத்தில் உள்ள பரபரப்பான வீதிகளில் தொடங்கவிட்டனர். மேலும் சில முக்கிய நகரங்களிலும் அந்த உடல்கள் பொதுமக்கள் காணும்படி தொடங்கவிடப்பட்டன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஹெராத் ஆளுநர் முகாஜிர் கூறும்போது, 'நாங்கள் இஸ்லாமிக் எமிரேட். யாரும் எங்கள் மக்களை துன்பப்படுத்தக்கூடாது. யாரும் கடத்தப்படக்கூடாது' என்றார்.

தலிபான்கள் முன்னதாக விடு[illegible] அறிவிப்பொன்றில், 'ஷரிஆ[illegible]டத்தின்படி தண்டனைகள் வ[illegible]கப்படும்' என்று தெரிவித்த[illegible] ஷரிஆ சட்டம் என்பது [illegible] கால்கள் துண்டிப்பு போ[illegible] உறுப்புத் துண்டிப்புத் தண்[illegible]களை ஆதரிக்கின்றமை குற[illegible]டத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
திருமதி நி.தர்மினி அவர்களின்
அன்புத் தந்தை


**அமரர் மாரிமுத்து மகேந்திரன்**

அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை
வேண்டுகின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்**
**வலிகாமம் தெற்குப் பிரதேச சபை**

## ஈர விழிகளுடன் இரண்டாம் வருட நினைவஞ்சலி

மண்ணுலகில்
19
01
1958



விண்ணுலகில்
28
09
2019

## ஆனந்தம் ஜெயக்குமாரன் கோமஸ்

(பி.ஜெ. பர்ணான்டோ உரிமையாளர்)

ஆண்டிரண்டு ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் அருகினிலிருந்தாலும்
அவனியில் உமக்கது ஈடாகுமா...
சிறகொடிந்த அன்றில் பறவைகளாய் நாம்
துடிக்கின்றோம் துவள்கின்றோம் சித்தம் கலங்கியே
தினமும் அழுகின்றோம்.
இப்பூவுலகில் இன்னொரு பிறப்பென்று ஒன்றிருந்தால்
மீண்டும் ஒரு முறை எம் மடி மீது மழலையாய் தவழ
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

**பி.ஜே.பர்ணான்டோ**
**131, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**
**077 8643992**

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், உற்றார்**
**உறவினர்கள், நண்பர்கள்;**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
05
01
1943



இறப்பு
29
08
2021

### அமரர்
### வேலுப்பிள்ளை துரைராசா


நெஞ்சம் கனக்குது விழிநீர் சொரியுது
உம் நினைவுகள் நெஞ்சில் ஊஞ்சல் ஆடுது அப்பா!!!
வஞ்சமில்லா உம்மன்புடன் பழகிய
உங்கள் நினைவுகள் எல்லாம்
நெஞ்சை உருக்குது அப்பா!!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

என்றும் உம் பிரிவால் துயருறும்...
**குடும்பத்தினர்.**

**வேலுப்பிள்ளை வீதி,**
**மீசாலை மேற்கு,**
**மீசாலை.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
30
05
1940



மறைவு
25
09
2021

### சின்னத்தம்பி சிவலிங்கம்

யாழ். வடமராட்சி அல்வாய் கிழக்கு அத்தாயைப் பிறப்பிடமாகவும், அல்வாய் கிழக்கு பத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவலிங்கம் அவர்கள் கடந்த (25.09.2021) சனிக்கிழமை அன்று சிவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற சின்னையா, பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவலிங்கம் தெய்வானை அவர்களின் அன்புக் கணவரும், மீனலோஜினி, பகீரதன், விஜிதா (லண்டன்), குமுதினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகரட்டினம், ஜீவா, ஜெயக்குமார் (லண்டன்), சிவராயன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தங்கவேலாயுதம், காலஞ்சென்ற செல்லத்துரை, கருணைப்பிரகாசம், கிருஸ்ணபிள்ளை, சரஸ்வதிஅம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், விதுஷன், நிதுஷன், சர்வின், சஷ்வின், அஷ்வின், ரஷ்வின், ஜெனுஷன், மிதுஷன் (லண்டன்), டக்ஷா, வக்ஷனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் (30.09.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு :**
தெய்வானை - மனைவி +94774605630
பகீரதன் - மகன் +447946338860
மீனலோஜினி - மகள் +447956112219
விஜிதா - மகள் +447436111149
குமுதினி - மகள் +14379224018
தங்கவேலாயுதம் - சகோதரன் +447950502281

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
28
10
1975



மறைவு
25
09
2021

### வினாசி பாலமோகன்

அல்லாரை வடக்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வளளாய் கிழக்கு அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசி பாலமோகன் அவர்கள் கடந்த (25.09.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசி செல்லம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், கதிரமலை காலஞ்சென்ற பரமேஷ்வரி தம்பதியரின் மருமகனும், ஜெயசுபாஜினியின் அன்புக் கணவரும், தேனுசன், தனுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசுந்தரம் (சுவிஸ்), இந்திரா தேவி (ஜேர்மன்), றஞ்சினி (சுவிஸ்), சந்திரா, நிர்மலா (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தவமலர் (சுவிஸ்), மரியதாஸ் (சுவிஸ்), ராஜா (ஜேர்மன்), சுதாகர், யசோதரன் (அவுஸ்திரேலியா), திவாகர், தினேஷ்கரன் மற்றும் சோபா, அருண் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**சகோதரர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 16 . 02 . 1953

ஆண்டவன் அடியில் 26 . 09 . 2021

## அருந்தவராசா செல்வராணி

பருத்தித்துறை கற்கோவளத்தை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி அவர்கள் 26 செப்டம்பர் 2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அருந்தவராசா அவர்களது அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை செல்வமணி தம்பதிகளின் புதல்வியும், சரவண பவானந்தம், நந்தகோபாலன், வள்ளிநாயகி ஆகியோரது சகோதரியும், ஜானகி, சசிகுமார், அகல்யா ஆதித்தன், ஹரிகாலன் ஆகியோரது பாசமிகு தாயாரும் பாஸ்கரன், ஹிருஜிகா ஆகியோரது மாமியாரும் கஸ்தூரி, கௌதமி, கேஷித் ஆகியோரது பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 28 செப்டம்பர் செவ்வாய்க் கிழமையன்று முற்கபல் 10 மணிக்கு களுபோவிலை பீரிஸ் மலர்ச்சாலையில் இருந்து கொகுவளை நகரமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**தொடர்புகளுக்கு:**
**077 226 4643**
**076 545 4563**
**077 519 5963**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

ஒதுக்கீட்டு சட்டமூலத்துக்கு ஒப்புதல்!

# பால்மா, எரிவாயு விலைஉயர்வு குறித்து அமைச்சரவையில் ஆராய்ந்தும் முடிவில்லை

2022 ஆம் நிதியாண்டுக்கான, நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றிரவு 'ஒன்லைன்' மூலம் நடைபெற்றது.

இதன்போது நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச முன்வைத்த நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பால்மா, கோதுமை மா, சமையல் எரிவாயு மற்றும் சிமெந்து ஆகியவற்றின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரை சம்பந்தமாகவும் அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படவில்லை என தெரியவருகின்றது. (த-44)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பிரதி அதிபர்
**திருமதி காமினி சந்திரபாலன்**
அவர்களின் பாசமிகு தந்தை

## சிவகுரு அரியரத்தினம்

அவர்கள்
27.09.2021 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்பகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திடையவும் இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**சேவையாளர் சங்கம்**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

# மரண அறிவித்தல்

## கலைச்செல்வன் தர்சிகா

**பிறப்பு : 25.07.1991** **இறப்பு : 26.09.2021**



பண்டத்தரிப்பு பிரான்பற்றை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கலைச் செல்வன் தர்சிகா கடந்த (26.09.2021) அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் ஜெயசாந்தன் சிவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், கந்தசாமி அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கலைச் செல்வனின் பாசமிகு மனைவியும் கிருஷிகனின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2021) செவ்வாய்க் கிழமை மு.ப. 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திரு. சிவகுரு அரியரத்தினம்

**(உரிமையாளர், சாவகச்சேரி அரியம் வெற்றிலைக் கடை)**



**பிறப்பு 15.06.1945** **இறப்பு 27.09.2021**

கற்குளி வடக்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சிவகுரு அரியரத்தினம் (வெற்றிலை அரியம்) அவர்கள் நேற்று (27.09.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு சிவகாமி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகமணி செல்லம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காமினி (ஆசிரியை, யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி), வினோதன் (கனடா), வினோதினி (ஆசிரியை, யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), யோகானந் (கனடா), ஹேமமாலினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகம்மா (கனடா), மகேஸ்வரி, காலஞ்சென்ற மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரபாலன் (உரிமையாளர் ஸ்ரீவள்ளி கபே), சத்தியநிதி (கனடா), சிவகுமார் தொழில்நுட்பவியலாளர், கைத்தொழில் அமைச்சு, ஆனையிறவு), கிருபனா (கனடா), சுஜீபன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பஞ்சாட்சரம், பிரம்மராம்பா மற்றும் மகேஸ்வரி இராசபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வைகுந்தன் (அவுஸ்திரேலியா), உமாபாலன் (SENOK Acadamy) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், நிலோஷிகா, மதுஷிகா, மதுஷிகன், லதூஷ், லக்ஷன், ஆரதி, தரண்யா, நேருஷன், லக்ஷறா, கம்ஷரா, கிஷாரா, அக்ஷயா, றனோஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.09.2021) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கற்குளி வடக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 669 1290**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகரசபை
## வியாபார நிலையங்களில்
## கட்டணக் கழிவகற்றல் சேவை

யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட இருநூற்றைம்பதுக்கும் (250) அதிகமான தனியார் கடைகள். விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள். உக்கக்கூடியவை. பொலித்தீன். பிளாஸ்ரிக். கண்ணாடி) மக்களுக்கு இடையூறு இல்லாமல் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு சென்று கழிவகற்றுவதற்காக ஒரு வருட காலத்திற்கு தகுதி வாய்ந்த சேவை வழுங்குனரிடமிருந்து யாழ் மாநகர சபை பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ் மாநகரசபை. பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 28.09.2021 - 12.10.2021 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் பி.ப 2.30 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரி உள்ளடங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவணத்தினை 12.10.2021 ஆம் திகதி பி.ப 2.30 மணி வரை கடமை நாட்களில் யாழ் மாநகரசபை. பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பார்வையிடலாம்.

கேள்வி வைப்புப்பணமாக ரூபா 20000 பணமாக செலுத்துதல் வேண்டும்.

கேள்விப் படிவங்களை 13.10.2021 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் தலைவர். பெறுகைக்குழு. மாநகரசபை. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

கேள்வி திறத்தல் 13.10.2021 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை கேள்விச்சபைக்குரியதாகும்

தலைவர், 28.09.2021
பெறுகைக்குழு,
யாழ் மாநகரசபை.

## சனத் பூஜித பதவி நீக்கம்?

கொழும்பு, செப்.28

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜிதவை பதவியிலிருந்து நீக்க அரசு தீர்மானித்துள்ளது என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கல்வி அமைச்சுக்கும், ஜனாதிபதி செயலகத்துக்கும் , பரீட்சைகள் திணைக்களம் தொடர்பாகப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பரீட்சை நடத்துவதற்கான முறைகள், பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜிதவை பதவி நீக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவரது பதவிக்கு மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு புதிய ஆணையாளர் நாயகத்தை நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-4)


### பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு
வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு
பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்பு: 077 2626 944


### பெயர் மாற்றம்

கண்ணகைபுரம் கிளிநொச்சியில் வசிக்கும் வேலாயுதம்-மயில் வாகனம் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை வேலாயுதம் - மகாலிங்கம் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் வேலாயுதம் மகாலிங்கம் என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

வேலாயுதம்-மகாலிங்கம்

### கண்ணீர் அஞ்சலி

கடந்த 2021.09.26 திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த
வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும்
திரு மகேந்திரன் பிரதீபன் அவர்களின் அன்புத் தந்தை

**மாரிமுத்து மகேந்திரன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

### 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13.09.1970 — மறைவு 28.09.2014

**அமரர் பாமதி அமிர்தகுமார்**

(ஆசிரியை, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)

ஆண்டுகள் ஏழானாலும்
அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் நிதம் வருகையிலே - நாம்
நிலைகுலைந்து போகின்றோம்
அன்பினால் நம் உள்ளங்களில்
ஆழமாய் குடியிருக்கும் - உம்மை
என்றென்றும் நினைத்திருப்போம்


சாந்தி! சாந்தி! சாந்தி!

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.

உம் பிரிவால் துயருறும்
-குடும்பத்தினர்-

### மரண அறிவித்தல்

மலர்வு 01 . 04 . 1934 — உதிர்வு 25 . 09 . 2021



**M.P.வேதநாயகம்**

(ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்-NSB
முன்னாள் உப தலைவர். பொருளாளர் OBA St.Patrick's College, Jaffna
முன்னாள் உப தலைவர் Bank Pensioner's Association)

யாழ் பிரதான வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மரியான் பேதுருப்பிள்ளை வேதநாயகம் கடந்த (25.09.2021) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை மரியப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான Dr.சேலிஸ். லேனாப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும். ஹெலன் வேதநாயகம் (ஓய்வுபெற்ற உப அதிபர் சென் அன்ரனீஸ் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும். Pamela Brian (Canada), Shereen Esperior (Switzerland), Anpalagan (Chemistry Anpu, Senior lecturer CLC, Former researcher Lund University, Sweden, former research assistant faculty of medicine, University of Jaffna), யாழினி நெவின் ஆகியோரின் பாசமிகு தந்தையும். பிறையன் கிறிஸ்ரியன் (Engineer- Canada). லியோ எஸ்பீரியர் (Switzerland). Dr.Jasiththa Anpalagan (Specialty Doctor, Rhumatology Queen Elizabeth Hospital,UK) அன்றூ நெவின் (Radiographer Teaching Hospital, Jaffna) ஆகியோரின் மாமனாரும். தங்கராணி (Switzerland) பிரான்சிஸ் (இளைப்பாறிய வங்கி முகாமையாளர். இலங்கை வங்கி). சௌந்தரி (இந்தியா). குலம். ரதி. நந்தினி ஆகியோரின் சகோதரனும். ஓய்வுபெற்ற காலஞ்சென்ற அருட்சகோதரி Lily Osa (A.C) காலஞ்சென்ற றெஜினா எசேக்கியேல் (ஆசிரியர்) அமரர் தேவதாசன் (ஓய்வுபெற்ற அதிபர். திருகோணமலை) Dr.Aloysius ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும். காலஞ்சென்ற யோசப் (Former head master St.Peter's College, Bambalapitiya) Emmanuel (Transport officer cooperative) ஆகியோரின் மைத்துனரும். Orian (Canada), Laxten (Canada), Jerry (Switzerland), Jessica (Switzerland), Shanjana (UK) அரவிந். ஆர்த்திக். இதழ்யா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (29.09.2021) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Helen - 94716427717
Shereen -0041446803831
Pamela +16477236072
Anpalagan +447728625443

368/3, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
021 4590 834

### மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 11 . 1936 — இறப்பு 25 . 09 . 2021



**திரு. தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்**

யாழ் சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்கள் கடந்த (25.09.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரலிங்கம் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பார்வதி தம்பதியிரின் அன்பு மருமகனும், இராமநாதன், சுபாசினி, சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாதேவி, சுபாஸ்கரன், குமாரதாஸ் ஆகியோரின் பாசமிகு மாமனும், கௌசிகா, டனுசன், திவ்யன், நிலுக்ஷிகா, லகிரா மதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

024 205 0712
004917622016467 (மகன்)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

## சபைநிதி வேலைத்திட்டங்கள் - 2021

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம், அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்க்ள் தரவு அட்டவணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர்/ செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2021.09.28 தொடக்கம் 2021.10.12 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரியில் 2021.09.28 ஆம் திகதியிலிருந்து 2021.10.12 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு 2021.10.12 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கீழ் காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து தொடர் இலக்கம் 1 மற்றும் இலக்கம் 2 ஆம் வேலைகளுக்கு **49** நாட்கள் **(2021.11.30 )** வரையும் தொடர் இலக்கம் 3 தொடக்கம் 6 வரையான வேலைகளுக்கும் **63** நாட்கள் **(2021.12.14)** வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2021.10.05 திகதி மாலை 15.00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப் படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியா கும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41/(6)/2/ C.F/2021/21,22, 23 | சரசாலை உபஅலுவலகம் புனரமைப்பு - சரசாலை<br>சரசாலை நூலக நடைபாதை நிர்மாணம் நிர்மாணம் - சரசாலை<br>கோயிலாமனை மயானம் புனரமைப்பு -இராமாவில் | 0.92 | 90 | C9/C8 (கட்டட நிர்மாணம்) | 9,500.00 | 2021.12.28 |
| 2 | NP/14/41/(6)/2/ C.F/2021/24,25, 26 | கைதடி நாவற்குழி பிரதான வீதி 4ஆவது ஒழுங்கை மீள்நிர்மாணம் - கைதடி நாவற்குழி<br>5 வீட்டுத் திட்டம் 2ஆவது வீதி 1ஆவது ஒழுங்கை மீள்நிர்மாணம் - நாவற்குழி<br>ஜவினைப்பிட்டி (ஊரியான்) இந்து மயான வீதி புனரமைப்பு - கைதடி கிழக்கு | 1.44 | 90 | C9/C8 (வீதி நிர்மாணம்) | 14,500.00 | 2021.12.28 |
| 3 | NP/14/41/(6)/2/ C.F/2021/27,28, 29,30,31 | A - 9 பனிக்கையடி இணைப்பு வீதி நிர்மாணம் (கட்டம் - I ) - மிருசுவில்<br>கொவ்வைக்கட்டி வீதி 3 ஆம் குறுக்குத்தெரு நிர்மாணம் (கட்டம் - I) - எழுதுமட்டுவாழ்<br>கிராமசபை வீதி 20 ஆம் வீதி மீள்நிர்மாணம் - கொடிகாமம் தெற்கு<br>அல்லாரை அறுகம்புலம் வீதி மீள் நிர்மாணம்<br>கார்த்திகைப் பிள்ளையார் கோவில் வீதி மீள் நிர்மாணம் - பாலாவி | 2.86 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 29,000.00 | 2022.01.11 |
| 4 | NP/14/41/(6)/2/ C.F/2021/32,33, 34,35,36,37,38 | பாதணிப்புலகுள வீதி (2 ஆம் குறுக்குத்தெரு) புனரமைப்பு - வரணி இயற்றாலை<br>திக்கில் கோவில் மணல் வீதி புனரமைப்பு - கரம்பைக்குறிச்சி<br>இரத்திக்குள 1 ஆம் வீதி புனரமைப்பு - வரணி இயற்றாலை<br>சூரியகுமார் சனசமூக நிலைய வீதி 1ஆம் குறுக்குத்தெரு புனரமைப்பு - மந்துவில்<br>குசவந்தபுர வீதி புனரமைப்பு - மந்துவில் மேற்கு<br>அம்பலாங்குள வீதி புனரமைப்பு - தாவளை இயற்றாலை<br>தடுப்புச்சுவர் நிர்மாணம் - கரன் வீதி (தாவளை இயற்றாலை) | 2.03 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 20,500.00 | 2022.01.11 |
| 5 | NP/14/41/(6)/2/ C.F/2021/39,40, 41,42,43 | அப்பக்கொட்டில் வீதி 3 ஆம் குறுக்குத்தெரு புனரமைப்பு - இராமாவில்<br>வாகையடி கிழக்கு வீதி நிர்மாணம் - கைதடி தெற்கு<br>வாகையடி மேற்கு வீதி நிர்மாணம் - கைதடி தெற்கு<br>குன்றுப்பள்ள 2 ஆம் குறுக்கு வீதி நிர்மாணம் கைதடி நுணாவில்<br>தம்பு கடை வீதி நிர்மாணம் - சரசாலை தெற்கு | 2.98 | 90 | C8/C7 (வீதி நிர்மாணம்) | 30,000.00 | 2022.01.11 |
| 6 | NP/14/41/(6)/2/ C.F/2021/44,45, 46 | தலைமை அலுவலகத்திற்கான சுற்றுமதில் அமைத்தல், (கட்டம் - I) (கொடிகாமம்<br>பழைய தலைமை அலுவலக திருத்தம் - கொடிகாமம்<br>மிருசுவில் நூலகத்திற்கான சுற்றுமதில் அமைத்தல் (கட்டம் - I) - மிருசுவில் | 2.63 | 90 | C8/C7 (கட்டட நிர்மாணம்) | 26,500.00 | 2022.01.11 |

தலைவர்.
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
சாவகச்சேரி பரதேசசபை,
கொடிகாமம்.
28.09.2021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சர்வதேச...*

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேசத் தயார் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளருடன் நடத்திய சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக கனேடியத் தமிழர் தேசியப் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, ஆஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், நோர்வே ஈழத் தமிழர் அவை, அயர்லாந்து தமிழர் பேரவை, தென்னாபிரிக்கா அமைதி மற்றும் நீதிக்கான ஒற்றுமை குழு, பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை, அமெரிக்க தமிழர் செயற்பாட்டுக் குழு ஆகிய 8 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் கூட்டாகக் கருத்து வெளியிட்டுள்ளன.

உலக நாடுகளில் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நோர்வே, ஐக்கிய இராச்சியம், கனடா, பிரான்ஸ், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, அயர்லாந்து ஆகிய நாடுகளைத் தளமாகக் கொண்டு இயங்கும் இந்த எட்டு அமைப்புகளும் புலம்பெயர் அமைப்புக்களில் மிக முக்கியமானவை.

ஆனால், பொறுப்புக்கூறலில் உள்ளகப் பொறிமுறை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்கின்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டை முற்றாக நிராகரிப்பதாகவும் இந்த எட்டு புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் முடிவெடுத்துள்ளன.

"ஜனாதிபதியின் அழைப்பு தாராள மனப்பான்மையின் வெளிப்பாடாக இருக்க முடியும் என்று நாம் நம்பவில்லை. சர்வதேச சமூகம் சிறிலங்காவுக்கு எதிரான நிலைப்பாட்டில் மிக இறுக்கமாக உள்ளது. சர்வதேச சமூகத்தை இந்தநிலைப்பாட்டுக்கு கொண்டு சென்றதில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் பங்கும், பங்களிப்பும் காத்திரமானவை. ஆகவேதான், இலங்கை ஜனாதிபதி புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேச்சு நடத்த தயார் என்று பந்து ஒன்றை வீசி உள்ளார்.

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைகள், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் நிறுத்தப்படலாம் என்கிற பெரும் அச்சம் இலங்கைக்குத் தொற்றியுள்ளது" என்றும் இந்தப் புலம்பெயர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதேநேரம், அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும், வடக்கு, கிழக்கில் படைத் தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும், பௌத்த ஆக்கிரமிப்புகள் நிறுத்தப்பட வேண்டும், காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு தரப்பட வேண்டும், உள்ளூர் தமிழ்த் தலைமைகளுடனும் பேச்சு நடத்த வேண்டும் ஆகிய விடயங்களை நடைமுறைப்படுத்தி நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும் இந்தத் தரப்புக்கள் கருத்துரைத்துள்ளன. (கு-22)

# 104 ஆவது நாள் நினைவஞ்சலியும் 54 ஆவது பிறந்த நாள் நினைவு அலைகளும்



மலர்வு 28 . 09 . 1967

உதிர்வு 17 . 06 . 2021

## பாலசுப்பிரமணியம் ஞானேந்திரம் (வவி)

இலட்சத்தில் நீ ஒருவன், சேவைக்கென்றே பிறந்தவன் நீ யாழ் மல்லாகத்தில்
உதித்து உயர்ந்து நின்று மறைந்து விட்டாய் திடீர் என்று எப்படி நாம் ஆறுவோம்?
ஆறிடத்தான் முடிந்திடுமா?

தூயவனே துயர்துடைத்தவனே.
துன்பத்திலும் இன்பமாய் வாழ்ந்தவனே
தரணி ஆள தம்பிமாரை, தங்கையை தந்தவனே
உன் நினைவுகள் என்றும் எம்மைத் தொடர்கிறது.

பெற்றோர் என்னும் பட்டத்தை தந்த தலைமகன் அல்லவா நீ
உன் மரணம் எம் உயிர்நாடியை ஊசலாடச் செய்கிறது.
கலியுகத்தின் மறுவடிவமாய் இன்னமும் வாழ்ந்து கொண்டிருகின்றாய்
அகவை ஐம்பத்து நான்கில் கால் பதிக்கும் வேளை
நீ எட்டாத கவியாகி விட்டாயே!
இன்று உன் பிறந்த நாள் எங்கள் தங்க மகனே!
நீ வாடா மலராய் எம் இதயத்தில் வீற்றிருப்பாய்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

பங்களா வீதி
மல்லாகம்.

திரு.க பாலசுப்பிரமணியம் (தந்தை)
திருமதி பா. தெய்வநாயகி (தாய்)

# கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர்

## சிவகுரு அரியரத்தினம்

**(உரிமையாளர் அரியம் வெற்றிலைக் கடை- சந்தை சாவகச்சேரி)**

அவர்கள் 27.09.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி
**கைத்தொழில் வணிகர் மன்றம்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 07 . 05 . 1946

விண்ணில் 29 . 08 . 2021

## அமரர் திருமதி சிவஞானம் விஜயகுமாரி

**(திதி: ஸப்தமி)**


அம்மா! நீங்கள் எங்களுக்கு கிடைத்த அன்புப் பொக்கிஷம்
எங்களை எல்லாம் வளமார வாழவைத்த அன்புத் தெய்வம் நீங்கள்
நித்தம் நித்தம் வாடுகின்றோம் உம் நினைவுகளைச் சுமந்தபடி
உதிரும் கண்ணீர்ப்பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

எமது தாயார் இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆறுதல் கூறிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.
0774080094

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 07 . 1930

மறைவு 19 . 09 . 2021

## நாகமுத்து துரைசாமி

**(துரைராஜா மாஸ்டர் ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி)**

இமையாணன் உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், நல்லூர், Sydney, Australia ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட துரைராஜா மாஸ்டர் எனவும் மகேந்து என்வும் அன்பாக அழைக்கப்பட்ட நாகமுத்து துரைசாமி அவர்கள் கடந்த (19.09.2021) இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து, பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும், சுகிர்தாவின் அன்புக் கணவரும், முரளிதரன் (Canada) கார்த்தியாயினி (Australia) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், Dr லிங்கதாஸ் அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, தர்மலிங்கம், செல்லப்பாக்கியம், கதிரவேல், முத்துராணி ஆகியோரின் அன்பு சகோதரனும், பாலினி, பிரியங்கா, Dr ஷரண்யா, மயூரன், நவீன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், ஆரியனின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (21.09.2021) செவ்வாய்க்கிழமை அன்று Sydney, Australia வில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
கார்த்தியாயினி (மகள்) : +61422454128
அருந்ததி (மருமகள்) : +64211134578

தகவல்:
**குடும்பத்தினர்.**

# 31ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு : 19.09.1963 உதிர்வு : 29.08.2021

நாதஸ்வர வித்துவான்

## நல்லையா பரந்தாமன்

**(நாதஸ்வர கலைமணி)**

**(திதி : ஸப்தமி)**

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி
நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

சட்டநாதர் சிவன் கோவிலடி,
கல்வியன்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேசப் ...

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியவை வருமாறு.

"ஐ.நா. பொதுச்சபையின் 76ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உரையாற்றினார். அத்துடன், இத்தாலியில் நடைபெற்ற சர்வதேச ஆன்மீக மாநாடொன்றில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச பிரதான உரையை நிகழ்த்தினார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கு நிகழ்நிலை மூலம் நான் பதிலளித்தேன்.

நியூயோர்க்கில் வைத்து இரு தரப்பு சந்திப்புகள் இடம்பெற்றன. குறிப்பாக பிரிட்டனின் பிரதிநிதி மற்றும் பொதுநலவாய அமைப்பின் பிரதான செயலாளர் ஆகியோருடன் பரந்துபட்ட கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தேன். மேலும் சில சந்திப்புகளும் இடம்பெற்றன. மேற்படி சந்திப்புகளின்போது, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது, இலங்கை தொடர்பில் கடைப்பிடிக்கும் அணுகுமுறை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் இலங்கையின் நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரியப்படுத்தினோம்.

மனித உரிமைகள் பேரவையுடன் மாத்திரமல்ல ஐ.நா. உட்பட அதன் ஏனைய கிளை அமைப்புகளுடன் நாம் ஒத்துழைப்புடன் செயற்பட்டுவருகின்றோம். எதிர்காலத்திலும் இந்த நடைமுறை தொடரும். அதில் எவ்வித மாற்றமும் வராது. கொரோனாப் பரவலுக்கு மத்தியிலும் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றியும் எடுத்துரைத்தோம்.

அத்துடன், இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் கடப்பாடு தேசிய நிறுவனங்களுக்கே இருக்கின்றது. அதற்கான பொறுப்பை நாம் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கமாட்டோம். அவ்வாறு வழங்குவது அரசமைப்புக்கு முரணான செயலாகும் என்பதுடன் அரசியல் கட்டமைப்புக்கும் எதிரான நடவடிக்கையாகும்.

சிறிய நாடோ, பெரிய நாடோ, சகல நாடுகளையும் பொதுவாகவே கருத வேண்டும் என்பதே ஐ.நாவின் பிரதான கோட்பாடாகும். எனினும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது இலங்கையை இலக்கு வைத்து செயற்பட்டுவருகின்றது. சர்வதேச பொறிமுறையை உருவாக்கி, சாட்சிகளைத் திரட்டி, இலங்கையை சர்வதேச நீதிமன்றம் முன்னிலையில் கொண்டுசெல்வதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. இதற்கு இடமளிக்கமாட்டோம். சாட்சிகளின் தகவல் வெளியிடப்படாது. எந்த அடிப்படையில் சாட்சிகள் திரட்டப்படுகின்றன என்பதும் தெரியாது.

இதற்காக பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உலகில் தடுப்பூசி தேவைப்படுகின்றது. பல நாடுகளில் தடுப்பூசி திட்டம் துரிதமாக இடம்பெறவில்லை. அவற்றுக்கு இந்தநிதியை பயன்படுத்தலாம். உலகில் வேறு நாடுகளில் பல பிரச்சினைகள் உள்ளன. இவற்றையெல்லாம் விடுத்து இலங்கை இலக்கு வைக்கப்படுவது ஏன்?

மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது அணிசேரா நாடுகள் மற்றும் முஸ்லிம் நாடுகள் ஆதரவை வெளிப்படுத்தின. மனித உரிமை விவகாரத்தை வைத்து உள்ளக பிரச்சினைகளில் தலையிட முடியாது எனவும் அவை சுட்டிக்காட்டின." என்றார். (த-44)

## வவுனியாவில் ...

கப்பட்டவர்கள் ஆகியோருக்கும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளின்போதும் பெறப்பட்ட முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின. அதன்படி மேற்படி எண்ணிக்கையான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக 20 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தொற்றாளர்களையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் சுய தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வவுனியாவில் அண்மைய நாள்களாக தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாகக் குறைவடைந்து செல்கின்றது. நேற்றுமுன்தினம் வெளியாகிய முடிவுகளில் 26 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-110)

## கொரோனாவால் ...

அவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். இந்தநிலையில், அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

அவர் அந்தப் பகுதியில் இடம்பெற்ற மரண நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. அதனால் குறித்த மரண நிகழ்வுக்குச் சென்றவர்களை சுயதனிமைப்படுத்திக் கொள்ளுமாறு சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். (த-159)

## 1000க்கு...

அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 14 ஆயிரத்து 592 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேலும் 812 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை 4 இலட்சத்து 55 ஆயிரத்து 344 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 51 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 731ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 51 பேரில் 29 ஆண்களும், 22 பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் 5 ஆண்கள், 5 பெண்கள் என 10 பேர் 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 41 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 24 ஆண்களும், 1[illegible] பெண்களும் அடங்கின்றனர். (த-22)

## குடிதண்ணீர்த் ...

சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்கும் இரண்டு பெரும் நீர்த்திட்டங்களின் மெய்நிகர் அங்குரார்ப்பண நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தாளையடியில் நிர்மாணிக்கப்படும் எஸ்.டபிள்யு.ஆர்.ஓ. கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நயினாதீவில் முழுமையாக நிறைவுசெய்யப்பட்ட தண்ணீர் விநியோகத் திட்டம் ஆகியனவே அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் தற்போது 5 ஆயிரம் பயனாளர்களுக்கு சுத்தமான தண்ணீர் வழங்கப்படுகிறது.

ஒரு லட்சம் மக்களை உள்ளடக்கிய வகையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் கீழ் 284 கிலோமீற்றர் தூரத்துக்கு குழாய்களை அமைக்கும் திட்டத்தை உள்ளடக்கிய யாழ். நகர நீர் விநியோகத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும். யாழ்.நகர நீர் விநியோகம் மற்றும் தாளையடி எஸ்.டபிள்யு.ஆர்.ஓ. திட்டங்கள் 2023ஆம் ஆண்டு நிறைவு செய்யப்படவுள்ளன. இதனூடாக மூன்று லட்சம் பயனாளர்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் பெற்றுக் கொடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த)

## இளம் தாய் ...

ணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கலைச்செல்வம் தர்சிகா (வயது - 30) என்பவரே தவறான முடிவெடுத்தவராவார். அவர் ஒரு பிள்ளையின் தாய்.

வெளிநாட்டிலுள்ள கணவன் திட்டியதால் அளவுக்கதிகமான மாத்திரைகளை 22 ஆம் திகதி உட்கொண்டு மயக்கமுற்ற நிலையில் யாழ்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார். போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (த-26)

## வாளுடன்...

சந்தேகநபரிடமிருந்து வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சங்கானையைச் சேர்ந்த அந்த இளைஞன் சுன்னாகம் நாகம்மா வீதியில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அவர் விசாரணைகளின் பின்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

அவரை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-26)

## அங்கஜனின்...

பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்களால் பணியாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்பு இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன், பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவராக நியமிக்கப்படவில்லை. ஆனாலும், கிராமத்துடன் கலந்துரையாடல் திட்டத்துக்கு அமைவாக கூட்டங்களை நடத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுத்து வருவதன் காரணமாக அதிகாரிகளுக்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் நியமிக்கப்படவில்லை.

வரவு செலவுத் திட்ட முன்மொழிவுத் தயாரிப்பில் கிராமத்துக்கு 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய திட்டங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் அந்தந்தப் பகுதி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்படவேண்டும் என்று நிதி அமைச்சு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரின் பங்கேற்புப் பற்றி எதுவும் கூறப்படவில்லை.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில், மாவட்ட ஒருங்கிணைப்பு இணைத் தலைவர் இ.அங்கஜன், பிரதேச ஒருங்கிணைப்பு இணைத் தலைவரின் பங்கேற்புடன் நடத்தவேண்டிய கூட்டத்தை இன்றைய தினம் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தவுள்ளார்.

சுற்றறிக்கையில் தெரிவிக்கப்படாத ஒன்றை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் அதிகாரிகள் குழப்பமடைந்துள்ளனர். (ஒ-5)

## வாள்வெட்டுக்குழு ...

குழு ஒன்றின் உறுப்பினர் என்று குற்றம் சாட்டப்படும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீடுகள் எரிக்கப்பட்ட சம்பவம், யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் வடக்கு மகாத்மா கிராமத்தில் நேற்றுமுன்தினம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

கடந்த 2ஆம் திகதி இதே பகுதியைச் சேர்ந்த ஒருவரும், அவரது கூட்டாளிகளும் இணைந்து அந்தப்பகுதியில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து பொருள்களை அடித்துநொறுக்கி வன்முறையில் ஈடுபட்டமையால், 6 குடும்பங்கள் தத்தம் வீடுகளிலிருந்து வெளியேறி வேறு இடங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தநிலையில், அந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் இரண்டு வீடுகளுக்குப் பெற்றோல் ஊற்றி தீ வைத்துள்ளனர். மேலும் சில வீடுகளின் ஜன்னல்களை உடைத்தும், சொத்துக்கள் உடமைகள் என்பவற்றுக்கு தீ வைத்தும் அவற்றைத் தீக்கிரையாக்கியுள்ளனர்.

இந்தநிலையில் வாள்வெட்டுக் குழுவின் பிரதான நபர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரது சகோதரனான மற்றைய நபர் உட்பட மேலும் சிலர் தலைமறைவாகியுள்ளனர் என்று தெரியவருகின்றது. அவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

வாள்வெட்டுக் குழுக்களின் அட்டூழியங்களால் நிம்மதியைத் தொலைத்துவிட்டு பயப்பீதியுடன் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். (த-26)

## கட்டுப்பாட்டு...

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்றிரவு நடைபெற்றது.

இதன்போதே அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலையை விதித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுவதற்கான யோசனையை வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்தார்.' இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன், ஒரு லட்சம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (த-44)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை இந்தியன்ஸை தோற்கடித்தது ஆர்.சி.பி

**பிளேஓவ் செல்வதில் உண்டானது இழுபறி**

புதுடில்லி, செப். 28

**ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் மும்பை இந்தியன்ஸைத் தோற்கடித்தது ஆர்.சி.பி. அணி மும்பையின் இந்தத் தோல்வியை அடுத்து அந்த அணி பிளேஓவ் சுற்றுக்குச் செல்லும் வாய்ப்பு குறைந்துள்ளது.**



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தா டிய ஆர்.சி.பிக்கு ஓட்டம் எதையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றினார் படிக்கல். விராட் கோலியுடன் இணைந்து அபாரமாக விளையாடினார் சிக்கார் பாரத். பிறிதொரு இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களைத் தொட்டது ஆர்.சி.பி. 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பாரத். அரைச்சதம் கடந்து 51 ஓட்டங்களுடன் கோலியும் ஆட்டமிழந்தார்.



இதற்காக அவர் 42 பந்துகளை எதிர்கொண்டார். மக்ஸ்வெல் அதிரடிகாட்டி 37 பந்துகளில் 56 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் 6 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது ஆர்.சி.பி.

பந்துவீச்சில் பும்ரா 3 இலக்குகளையும், போல்ட், மில்னி, சகர் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பை அணி ஆரம்பத்தில் பலமான ஆரம்பத்தைக் கண்டது. இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைக் கடந்தது ரோகித், குயின்டன் இணை. அணி 57 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குயின்டன் டி ஹொக். ரோகித் சர்மா ஒரு முனையில் நிலைத்துநின்றா லும் மறுமுனையில் எந்தவொரு வீரரும் ஒற்றையிலக்கத்தைத் தாண்டவில்லை. கடப்பாறை 'லைன்அப்' என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் மும்பை போராடாமல் சரணடைந்தது. வெந்தபுண்ணில் வேல் பாய்வதைப் போன்று பாண்டியா, பொலார்ட், மில்னி ஆகியோரை அடுத்தடுத்து வெளியேற்றி ஹட்ரிக் சாதனை படைத்தார் ஹர்சல் பட்டேல். முடிவில் 111 ஓட்டங்களில் சுருண்டு மடிந்தது மும்பை.

மும்பைக்கு இன்னும் 4 ஆட்டங்கள் எஞ்சியுள்ளன. அத்தனை ஆட்டங்களிலும் வெற்றிபெற்றாலேயே அந்த அணியால் பிளேஓவ் சுற்றுக்குச் செல்லமுடியும்.

(ம)

## ஹர்சல் பட்டேல் ஹட்ரிக் சாதனை

டுபாய், செப். 28

ஐ.பி.எல். தொடரில் ஹட்ரிக் சாதனை படைத்த 17ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார் ஆர்.சி.பி அணியின் பந்துவீச்சாளர் ஹர்சல் பட்டேல்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் ஹர்சல் பட்டேல் அபாரமான பந்துவீச்சை வெளிப்படுத்தினார். ஹர்திக் பாண்டியா, பொலார்ட், மில்னி ஆகியோரை வெறியேற்றியே ஹட்ரிக் படைத்தார் ஹர்சல் பட்டேல். இதற்கு முன்னர் 16 வீரர்கள் ஐ.பி.எல்லில் ஹட்ரிக் சாதனை படைத்துள்ள நிலையில் தன்னை 17ஆவது வீரராக அவர் இணைத்தார்.

(ம)



**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் வயோதிபரை பராமரிக்க ஆண் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு: **077 9988 066**

**பொருளியற் கல்லூரி**

நாவலர் றோட் யாழ்ப்பாணம். K.K.S.றோட் சுன்னாகம்.

**BARATHY**

சித்தன்கேணி

**மூன்று இடங்களிலும்**

**Zoom**

**இணையவழி வகுப்புகள்**

**A/L 2023**

**கலை, வர்த்தகம்**

புதிய வகுப்புகள் ஆரம்பம் **02.10.2021**

உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்

யாழ் நகரில் - 09.00 AM - 12.30 PM வரை
சுன்னாகம் - 03.30 PM - 05.30 PM வரை
சித்தன்கேணி - 09.30 AM - 11.30 AM வரை

வெளி மாவட்ட மாணவர்களும் அனுமதி பெறமுடியும்

01.10.2021 இற்கு முன் உங்கள் அனுமதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு: **077 3763511**

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி. ஆறுகால்மடம். இரண்டாம் ஒழுங்கையில் 20 அடி பாதையுடன் 10 ப்ரப்புக் காணி சட்டபூர்வமாக சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
(யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2 K.M தூரம்). தொடர்புகொள்ளும் நேரம் காலை 9.00-மாலை 6.00 மணிவரை)
ஒரு பரப்பின் விலை ஆறு லட்சம்.

**076 221 2037, 077 288 0152, 076 734 1023**

விஸ்டம்

**விஸ்டம்**

**தொழில் நுட்பக் கல்லூரி**

இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

தொழினுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் தேசிய மாவட்ட முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்

**A/L 2023**

**தொழினுட்பப் பிரிவு**

**புதிய பிரிவு ஆரம்பம்**

ZOOM செயலி ஊடாக

**செப்ரம்பர் 30**

**காலை 8.01மணிக்கு**

Engineering Technology & Bio Systems Technology
Science for Technology
ICT, Agricultural Science, Maths(7)
ஏனைய தொகுதிப் பாடங்களும் நடைபெறும்.

நாட்டின் எப்பகுதியில் இருந்தும் இணைந்து கொள்ளலாம்.
அனுமதியினைப் பெற கீழ் காணும் தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கும் மற்றும் பதிவுகளுக்கும்:-
077 248 7774 / 076 552 9093 / 021 221 7860

**தேவை**

நல்ல நிலையில் உள்ள படத்தில் காட்டப்பட்ட வடிவிலான படிக்கட்டு தேவை.



**தொடர்பு**

**0767374444**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.